**03-09-2024**

**MCOP. No.13/2023**

**ம.சா. 1 – திரு.ஜீவகுமார்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு 1,2-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து நடந்தது 16.07.2022 ஆகும். நான் ஓட்டிவந்த என்பீல்ட் புல்லட்டின் உரிமையாளர் நான் இல்லை. நான் ஓட்டி வந்த பைக்கின் காப்பீடுதாரரை தான் 3ம் எதிர்மனுதாரராக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் ஓட்டி வந்த என்பீல்ட் பைக்கின் உரிமையாளரை நான் வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த சாலை கிழக்கிலிருந்து மேற்காக செல்லும்சாலை என்றால் சரிதான். நான் கிழமேல் செல்லும் ரோட்டில் தெற்குபக்கமாக திருப்பினேன் என்றால் சரியல்ல, சாலையின் இடதுபுறம் சென்றுகொண்டிருந்தேன். விபத்து எவ்வாறு நடந்தது என்ற முழுவிபரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் 2ம் எதிர்மனுதாரர் தான் என்னை வால்பாறை அரசுமருத்துவமனைக்கு கூட்டிச்சென்றார். போலீசாரிடம் விபத்து நடந்த விபரத்தை நான் சொல்லவில்லை. முதல் தகவல் அறிக்கை நான் சொன்ன தகவலின் அடிப்படையில் தயாரிக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. முதல் தகவல் அறிக்கையில் உள்ள விபரங்கள் நான் சொன்ன விசயங்கள் அல்ல என்றால் சரிதான். விபத்து சம்பந்தப்பட்ட நான்கு சக்கர வாகனத்தின் பதிவெண் 5511 என்று மட்டும் நினைவுள்ளது. விபத்து நடந்த சமயத்தில் பிகேடி டீ கம்பெனியில் வேலைபார்த்தேன். மேற்படி கம்பெனியில் வேலைபார்த்து மாதவருமானம் ஈட்டிவருவதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை, ஆனால் வருமானவரி சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போதும் அதே கம்பெனியில் தான் வேலைபார்த்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போதும் விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு தொடர்சிகிச்சை எடுக்கவில்லை என்றால் சரியல்ல, எடுத்து வருகிறேன். தொடர்சிகிச்சை எடுத்து வருவதற்கான மருத்துவ பில்களை நான் தாக்கல் செய்யவில்லை. விபத்தானது நான் இருசக்கர வாகனத்தை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலைவிதிகளை மீறி ஓட்டிவந்ததால் ஏற்பட்டது என்றால்

சரியல்ல. 2ம் எதிர்மனுதார் நான்குசக்கர வாகனத்தை மிதவேகமாகவும், சாலைவிதிகளை கடைபிடித்தும் தான் ஓட்டிவந்தார் என்றால் சரியல்ல. மனுவில் கூறியுள்ளதுபோல் எனக்கு எந்தஊனமும் இல்லை என்றும், நான் தற்போதும் வேலைபார்த்து சம்பாதித்து வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய தவறுகையால் ஏற்பட்ட விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரோ, அவரின் வாகன ஓட்டுநரோ எவ்வித நஷ்டஈடும் கொடுக்ககடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய தவறை மறைத்து நஷ்டஈடு வாங்கவேண்டும் என்ற நோக்கத்துடன் நான் ஓட்டிவந்த வாகனத்தின் உரிமையாளரை மனுவில் கட்சிசேர்க்காமல் மறைத்து உள்நோக்கத்துடன் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1,2 எதிர்மனுதாரர்களை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

*Taken down by me/before me in open Court,*
*interpreted/read over to the witness and*
*admitted by the deponent to be correct.*

K KAVITHA
Digitally signed by K KAVITHA
Date: 2024.09.03 19:13:34 +0530

Chief Judicial Magistrate,
Theni.